ஆஸாத F
VOL. 4. Nos. 1-4.
w. nos 5-12 / 29-Jan 1951 - 24. Apl. 1951
R. B. Nos. 483 760 19 662 / 1-51 " 201 "
R 4

ஸாத்

குடியரசு.

29—1—51

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHTLY
KUMBAKONAM

FOUNDER: HAJEE - M. ABDUR RAHMAN SAHIB
EDITOR: MAULANA ABDUL HAKEEM

பொருள் அடக்கம்.

நேபாள அரசியல்
காஷ்மீர் விவகாரம்
காங்கிரஸ் வருங்காலம்
இந்தியாவும் சீனவும்
ஐக்கிய இந்திய சிற்பி
சர்தார்படேலின் சேவை
செய்திகள்.

இதழ் 1.

★

குறைந்த விலையில் அழகிய ஆடைகள்

Truthful
READY MADE CLOTHES

"ட்ரூத்புல்" ஆடைகளே!

எங்கள் எம்பிராய்டரி வேலைப்பாடுகள்
ஒரு தனி ரகம்.
சகோதர சகோதரிகள் யாவரும் ஒரு முறை
வாங்கி அணிந்து ஆனந்தம் அடைய
வேண்டுகிறோம்
இந்தியாவெங்கும் ஒரே விலைக்கு
விற்கப்படுகிறது.

தயாரிப்பவர்கள்,
தி ட்ரூத்புல் மனுபாக்சரிங்
கம்பெனி லிமிடெட், மதுரை.

அறிக்கை.

★

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா (24 பிரதிகளுக்கு) ரூ. 3,
(ரூபாய் மூன்று மட்டும்)
இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள்
மணியார்டர் மூலம் அனுப்பி ஆதரிக்க
வேண்டுகிறோம்.

*

மானேஜர் - "ஆஸாத்" - கும்பகோணம்.

'AZAD' NATIONAL TAMIL BI-MONTHLY KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை கும்பகோணம்.

மலர் 4 | விக்ருதுஸு தை-மீ 16௳ (29-1-1951) ஹிஜிரி 1370 ரபியூலாவல் மீ 20௳ திங்கட்கிழமை | இதழ் 1

CONNEMARA PUBLIC LIBRARY 29 MAY 1955

நேபாள அரசியல்

நேபாளம் என்ற சொல் கேட்டதும்,......ஆண்டுதோறும் பசுபதிநாத் உற்சவம் நடப்பதையும், அதில் பல்லாயிர இந்திய சகோதரர்கள் பக்தி பரவசமாகி கலந்து கொள்வதையும்; 857ம் ஆண்டு விடுதலைப் போராட்டம், ஜலியன்வாலாபாக் படுகொலை, 1930-32 சுதந்திர இயக்கம், தேசீய ராணுவ சம்பவம் முதலியவற்றின்போது, இந்தியத்தாயின் வீரப் புதல்வர்கள் பலரை துப்பாக்கிக் குண்டுகளுக் கிரையாக்கி, வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் சமிக்கைகளுக்கேற்ப கூத்தாடிய கூர்க்க சிப்பாய்களையும் எந்த இந்தியனும் நினையாமலிருக்க முடியாது. ஆனல் அக்கொடிய துரோக காரியங்களுக்கு என்ன காரணம்? என்பதை நேபாளிகளைத் தவிர மற்ற தேசத்தினர் யாராலும் உணர முடியாது. நேபாள நாட்டில் கல்வி, கேள்வி, நாகரீகம், கலாச்சாரம், முதலியவற்றின் காற்றும் வீசுவதை அந் நாட்டு நிர்வாகம் விரும்பவில்லை. பன்னூறாண்டுகளாய் அங்கு பேச்சு, எழுத்து, கட்சிக் கட்டுப்பாடு முதலியவை தடை செய்யப்பட்டுள்ளன ஆளும் வர்க்கத்தினரின் மனப்போக்கே அங்கு அரசியல் சட்டமாகும், குதிரை வண்டிகளோ, மோட்டார் கார்களோ வைக்க எவருக்கும் உரிமையில்லை. காந்திஜியைச் சந்தித்த குற்றத்திற்காக அங்கு ஒருவர் தூக்கிலிடப்பட்டார் என்ருல் அந்நாட்டின் அவல நிலை எத்தகையது என்பதை பூரணமாகத் தெரியவில்லையெனினும் ஒருவாறு உணரலாம்

இயற்கையமைப்பு.

நேபாளம் சற்றேறக்குறைய 500-மைல் நீளமும் 90-முதல் 130-மைல் அகலமும் கொண்ட நாடாகும் அதன் வடக்கில் இமயமலை சிகரங்களும் திபெத்திய சம வெளிகளும், தெற்கில் பீகார் உத்திர பிரதேச இந்திய மகாணங்களும், கிழக்கில் சிக்கிம் சமஸ்தானமும், டார்ஜிலிங்கும், மேற்கில் அல்மோரா, கர்வால் பிரதேசங்களும் உள்ளன மேச்சி, மகா காளி நதிகள் முறையே கிழக்கிலும் மேற்கிலும் இயற்கை அரண்களாகும், ஆனல் தெற்கில் எவ்வித இயற்கை எல்லையுமில்லை

இயற்கைச் செல்வம்.

நேபாளத்தில் இயற்கைச் செல்வத்திற்கு அளவேயில்லை. எல்லாவித கனிப்பொருள்களும் கிடைக்கின்றன. பொன், பெட்ரோலியம் முதலிய சுரங்கங்களும் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றை சிறிய முறையில் பயன்படுத்த இன்றுவரை முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்திய ராஜ்யங்கள் யாவும் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக்குப் பணிந்து விட்டபோதிலும் நேபாளம் தன்சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கவில்லை. 1814-16 ஆண்டுகளில் ஆகர்லானி என்ற வெள்ளை படைவீரன் பட்டாளங்களுடன் காட்டுமண்டுவரை ஆக்கிரமித்து விட்டானெனினும் நெப்பாளி மக்கள் மனம் தளராது போரிட்டனர். அச்சண்டையில் அவர்கள் காட்டிய வீரம் இன்றுவரை ஆங்கிலேயரை பிரமிக்கச் செய்கிறது.

1816-ல் சாகோலி உடன்பாட்டிற்குப் பின்பும், நேபாள மன்னர் ராஜேந்திர விக்கிரம மகாராஜா, சீக்கிய, மராட்டியர் முதலியோருடன் சேர்ந்து வெள்ளையரை விரட்ட திட்டமிட்டார். ஆனல் ஆங்கில தூதருக்கு அச்சதி திட்டம் தெரிந்துவிட்டது. அவர் நேபாள தளகர்த்தருக்கு லஞ்சம் கொடுத்து தன்னுடன் சேர்த்துக்கொண்டார். 1846 அக் 25-தேதியன்று தளகர்த்தர் ஜுங்பஹாதுர் கன்வர் நேபாள வீரத்தலைவர்கள் பலரை சிறச்சேத செய்து, அந்நாட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். பிரதமர் என்ற முறை சர்வாதிகாரியாகி விட்டான். அன்று முதல் அரசருக்கு எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை. அரசாங்க பொக்கிஷம். ராணுவம், தளவாடஉற்பத்தி முதலியவை யாவும் பிரதமரின் அதிகாரத்திற்குட்பட்டுவிட்டன. அரசாங்க பொக்கிஷம் என்ற பெயரேயன்றி அது பிரதமரின் சொந்த சொத்தாகவே இருந்துவந்துள்ளது. பல்லாயிர ஏக்கர் நிலங்கள் பிரதமர் என்ற முறையில் அவருக்கு உரிமையாகி விட்டன. இம்முறையை நேபாளத்தில் பிர்தா என்று கூறுகின்றனர்.

ஜஸ்கபஹாதூர் காலம் முதல் பிரதமர் பதவி பரம்பரை உரிமையாகிவிட்டது. தனக்குப்பின் தன் குடும்பத்தினரிடையே உரிமைச் சண்டைகள் நிகழலாகாது என்ற காரணத்தால் ஜஸ்பஹாதூர் தன் பதவிக்கு தமது சகோதரர்களே வாரிசு என்று நியமித்தார். அச்செயலே ராணு குடும்பத்தினர் தேசிய நிதியை தம் சொந்த பெயருக்கு அந்நியநாட்டு பாங்குகளில் குவியச் செய்கின்றனர். பொது ஜனங்கள் படும் தொல்லைகளில் அவர்களுக்கு எள்ளளவு கவலையுமில்லை.

1857-ம் ஆண்டு இந்திய சுதந்தர கிளர்ச்சியை அடக்க ஜஸ்பஹாதூர் உதவியதால் திராணி பிரதேசத்தை ஆங்கிலேயர்களால் இனமாக அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, இந்திய தேசிய போராட்டங்கள் வியட்நாம் சுதந்தரக் கிளர்ச்சிகள் மலேயா விடுதலை இயக்கங்கள் முதலியவற்றை அடக்க கூர்க்க வீரர்கள் உதவி நாடப்பட்டது. ஜஸ்பஹாதூருக்குப் பின் நேபாள பிரதமர்கள் தமதுபெயருடன் கன்வருக்குப்பதில் ராணு என்ற பட்டம் சேர்த்துக் கொண்டனர். நிர்வாகம் காரணமாக ராணுக்களுக்குள் சண்டைகளும்நிகழ்ந்துள்ளன. ராணு நவதீப் சிங் தம்டு சிற்றப்பன் குழந்தைகள் செய்த சதியினுல் கொலை செய்யப்பட்டார். ராணுதேவ்ஷம்ஷேரை நாட்டை விட்டுத் துரத்தி ராணு சந்திரஷம்ஷேர் பதவியை ஆக்ரமித்துக் கொண்டார்.

கல்வி

ராணு ஆட்சி ஆரம்பமாகி 125-ஆண்டுகள் ஆகிவிட்டன. இக்காலத்தில் நேபாள மக்களின் நிலைமை என்ன? என்பதை ஆராயவேண்டும் இன்றுள்ள நிலைமை என்ன? நேபாளத்தில் ஒரு கோடி மக்கள் உள்ளனர். ஆனுல் அங்கு இரு உயர்தர பாடசாலைகளும் ஒரு கலாசாலை (காலேஜ்) யுமே 1936-வரை இருந்துவந்தன இன்று பொது மக்களின் சொந்த முயற்சியால் நாலைந்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேபாள ஜல்லி போட்ட சாலைகள் மொத்தம் 35-மைல் நீளமே மீட்டர் அளவு இருப்புப்பாதை 45-மைல் நீளம்கொண்டது மூன்று ஆஸ்பத்திரிகள் பத்து பனிரெண்டு மருந்துசாலை (Dispensary)களும் உள்ளன. வருமானம் சற்றேறக்குறைய ஒன்பது கோடி யாயினும் நாட்டுக்காக செலவிடப்படுவது மொத்தம் மூன்று லெட்ச ரூபாய்களே. நாடு அனைத்திற்கும் ஒரு சிறிய ஆரே உள்ளது. அதை ஆறு என்று கூறுவதை விட ஓடை என்றே கூறவேண்டும்.

பொருளாதாரமும். பட்ஜெட்டும்.

சர்க்கார்உத்தியோகஸ்தர்களின் சம்பளத்திற்கும் வரி உண்டு. ஆனுல் ராணு வருமானத்திற்கு மட்டும் இல்லை.

சொத்து சுங்கம் காடுகள் முதலியவற்றுல் மொத்தம் ஐந்துகோடி (5) முப்பது (30) லட்சம் ரூமாய் வருமானம் கிடைக்கிறது. புகையிலையால் 15-லட்சமும், சாலைகள், நியாயஸ்தலங்கள் மின்சாரம், இருப்புப்பாதை. முதலியவற்றுல் 45-லட்சமும். வரி விதிக்கப்படாத ராணு சொத்துக்களால் 3-கோடியும் கிடைக்கிறது. காணிக்கையாக இந்திய பத்து லட்சமும் தீபெத்து பதினையிரம் ரூபாயும் அளிக்கின்றன.

செலவினங்கள்.

ராணுவத்திற்கு 36-லட்சம்; நிர்வாகத்திற்கு 35 லட்சம் சுகாதாரம், கல்வி முதலியவற்றிற்கு 33-லெட்சம் இருப்புப்பாதை நிர்வாகம் 2-லெட்சத்து ஐம்பதாயிரம். போக்கு வரத்து சாலைகள், தபால் தந்தி முதலியவற்றிற்கு 36-ஆயிரம் இவைதான் செலவினங்கள். மற்ற வருமானம்அனைத்தும் ராணுக்களின் சொந்தசொத்தாகிவிடுகிறது. அதை குறை கூறவோ, கேட்கவோ யாருக்கும் உரிமை கிடையாது.

ஒரு புறம் ராணு கும்பல் இவ்விதம் கொள்ளையடிக்கையில் மறு புறம் பொதுமக்கள் வறுமையால் மடிகின்றனர். இன்று இந்திய நகரங்களில் பல்லாயிர கூர்க்கர்கள் வியாபார ஸ்தலங்கள் முதலியவற்றிற்கு காவல் காப்பதும், குழந்தைகளும் ஸ்திரீகளும் போஜன சாலைகளுள் சேவை புரிவதையும் நாம் பார்க்கலாம். வேறுபிழைப்பு இல்லாமையால் பலர் ராணுவத்தில் சேர்ந்துவிடுகின்றனர். பீரங்கிகளுக்கு இரையாக, ஆங்கிலேயர் அவர்களை உபயோகிக்கின்றனர். ஆயினும் கூர்க்கர்கள் அதையும் பொருட்படுத்தாமல் நாட்டைவிட்டு,வெளியேறிஎவ்விதத்திலும்வயிறு நிரம்பினுல் போதும் என்று நினைக்கின்றனர். அந்நிய நாட்டினருக்கு காணிக்கையாய் யளிக்கராணுக்களிடம் கூர்க்கர்களைத்தவிர வேறொன்றுமில்லை. இரண்டாம் உலகயுத்தத்தின் போது கூர்க்கர்களை வேட்டையாடி ராணுவத்தில் அமர்த்திக்கொண்டதால் பலகாலம் கிராமாந்திரப்பகுதிகளில் வாலிபர்களைப் பார்க்கவே முடியாது போயிற்றும்.

நேபாள கிராம மக்களுக்கு ஆண்டில் இரண்டு மாதமே வயிரார உணவு கிடைக்கிறது. அதுவும் காட்டுச்சோளமும், (நேபாளியில் அதை டோமண்டு என்பர்) ஸன்கு என்னும் ஒருவகை புல்லுமே கிடைக்கும். ஸன்கு புல்லைத் தொட்டால் கையில் அரிப்பு ஏற்படும் குறிப்பிட்ட பண்டிகைகள்போது முக்கியஸ்தர்கள் சிலருக்கு அரிசி உணவு கிடைக்கும், காய்ந்த மரவள்ளிக்கிழங்கு கீரைகள், சின்கு என்ற காய்ந்த முள்ளங்கி, இவையே பொதுவான உணவுவகைகள் தண்ணீர கிடைக்கப் பெருது மக்கள் நெடுந்தூரம் சென்று கொண்டுவருகின்றனர். திராணி பிரதேசம் நல்ல வளம் பொருந்தியதே ஆனுல் தண்ணீர் பாய்ச்சலுக்கு வகையில்லாததால் அங்கு விவசாயம் நடைபெறவில்லை.

பொது மக்களின் அவல நிலைமையில் சர்க்காருக்கு எவ்வித கவலையுமில்லை இந்தியாவில் துணிக் கண்ட்ரோல் இருந்தால் நேபாள மக்களுக்கு நான்கு ஆண்டுகள்வரை துணியே கிடைக்கவில்லை என்று கூறலாம். சர்க்கரை, எண்ணெய், மண்ணெண்ணெய் முதலியவை அங்கு கிடைப்பதேயில்லை. பஞ்சம் காரணமாக விவசாயிகள் வரி கொடுக்காவிட்டால் உடனே அவர்களுடைய நிலங்கள் ஏலம் போடப்படும். சிற்சில இடங்களில் கால்நடைகளின் சாணம் முதலிய கழிவுப் பொருள்களை தண்ணீரில் கரைத்து அதில் கிடைக்கும் தானியங் (தோமடுவா) களை சாப்பிடுகிறார்கள்.

உணவு நிலைமையே அதுவாயின் மற்ற அத்யாவசியப் பொருள்களைப்பற்றி கூறவும் வேண்டுமோ? ஆண்களுக்கு கோவணமும், மேலே ஒரு கிழிந்த சட்டை, தலைமேல் ஒரு பழைய குல்லாய் முதலியவையே உடையாகும். 1918—19 ல் அவ்வித உடைகளை தபால் மூலம் ராணாவுக்கு அனுப்பிய ஒரு நேபாளி நாட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

எல்லா உயர்ந்த பதவிகளும் ராணா குடும்பத்தினருக்கே, படிப்பு வாசனையே அற்றவனாயினும் ராணா குடும்பத்தினன் எவ்வித பதவிக்கும் தகுதியானவன் என்றே சர்க்கார் சட்டம் கூறுகிறது. ஒரு பிள்ளையைப் பெற்றதும் அவனுக்கு கர்னல் ஜெனரல் என்ற பட்டம் கிடைத்துவிடும். 'தாடி மீசை முளைக்காத சிறு வயதினரும் ஜெனரலாகிவிடும் விசித்திரமான நாடு நேபாளம்'', என்று ஒரு ஆங்கிலேயர் எழுதியிருக்கிறார்.

நிர்வாக யந்திரத்தில் அநேகமாய் ராணா குடும்பத்தினரே முக்கியஸ்தானம் வகிக்கின்றனர். சர்க்கார் என்பது ராணாவின் பொழுதுபோக்கு விளையாட்டு என்றே கூறவேண்டும். பொது மக்களுக்கு சாதாரண உரிமைகளும் கிடையாது. ஆண்டுதோறும் தவறாது ஒவ்வொருவரும் காணிக்கை செலுத்தவேண்டும். தெருவில் ராணா குடும்பத்தினர் வருவதை கண்டால் அவர் தாண்டிச் செல்லும்வரை குனிந்து வணங்க வேண்டும். எந்த நேபாளியும் குதிரைமீதேறி ராணா மாளிகைசுற்றுப் புறங்களில் செல்லலாகாது மீறினால் அவன் உடையைக் களைந்து சாட்டையால் தண்டிக்கப்படுவான் கடுங்குளிரிலும் கோட்டோ வேறு மேலாடையே அணியக்கூடாது. வீட்டில் தாங்களே வெள்ளையடிக்க யாருக்கும் உரிமை கிடையாது பீரங்கி சுடப்பட்டபின் வீட்டைவிட்டு யாரும் வெளியே வரக்கூடாது. ராணா குடும்பத்தினர் கொலை செய்துவிட்டாலும் ஓர் இருநாள் காவலைத்தவிர அவர்களுக்குத் தண்டனை கிடையாது

இன்று நேபாள காங்கிரஸ் காரர்களின் இடையறாத் தொண்டினால் மாபெறும் புரட்சி உறுவாகியிருக்கும் நாட்டின் நிலைமை இதுவே. ராணா ஆட்சிக்கு சமாதி கட்டப்பட்டு அந் நாட்டு பொதுமக்களுக்கு உண்மை மனித உரிமைகள் கிடைக்கும் நன்னாள் வெகு சமீபத்திலுள்ளதென்று நம்புவோமாக.

காஷ்மீர் விவகாரம்

இந்திய உபகண்டத்தில், தான்வாழ்வது துர்லபம் மரணம் நிச்சயம் என்றுணர்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந் நாட்டைத் துண்டாடி நிரந்தர பலஹீனத்தைஉண்டாக்கி தொலைந்து போவதே தன் வாழ்வுக்கு ஏற்ற விஷயம் என்று தீர்மானித்தது. வெள்ளையன் வெளியேறிவிட்டான் ஆனால் நமக்கு தீராப் பிரச்சனைகள் பலவற்றை அளித்துச் சென்றான். பாரதம், பாகிஸ்தானால் அப்பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது. நம் உதவியை நாடியே தீரவேண்டும்' என்று ஆனந்தப் பட்டுக்கொண்டு சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு லண்டனில் உட்கார்ந்திருந்தான். காஷ்மீர விஷயமும் வெள்ளையன் சிருஷ்டித்த மாயவலையின் ஓர் பாகமே. தான், விரித்தவலையில் இரு நாடுகளும் விழுந்தே தீரும் என்று நினைத்துக்கொண்டிருந்தான் ஆனால் ஆசியநாடுகள் புரட்சிமயமாகிவருவதும். இந்தியா-பாக். நாடுகளை நிர்மூலமாக்க தான் செய்த தில்லுமல்லுகளே தன் அழிவுக்கு அஸ்திவாரமென்பதை வெள்ளையன் உணறவில்லை

“கம்யூனிஸ அபாயத்தை முறியடிக்கும் முதற்காரியமாய் நாம் இந்தியா-பாகிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளுக்கு விடுதலையளித்துவிட்டோம், என்று பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பெருமையுடன்கூறினார் அதாவது கம்யூனிஸ அபாயம் தோன்றியிராவிடில் இந்தியாவை தனது பேய் பிடியினின்றும் வெள்ளையன் விடுவித்தேயிருக்கமாட்டான் என்பதே பொருள். நம்மைவிடுவித்த அட்லி நம் இதயத்தை இரு கூறாய்ப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் பல தீரா பிரச்னைகளில் சிக்கவைத்துவிட்டது பெருமைபடக்கூடிய விஷயமல்ல.

இன்று புரட்சி இயக்கங்களின் புயல் இவ்வுபகண்டத்தின் எல்லைகளை மோதி, இமயக் கணவாய்களின் வழியாய் உள்ளே புக எட்டிப்பார்த்து கொண்டிருக்கையில். பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்தியா- பாக் இரு நாடுகளும் ஐக்கிய பாதுகாப்புமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று கூறவும் முற்பட்டு விட்டன. ஆகவே பிரிட்டிஷ் அரசியலார் கடைப் பிடிக்கும் அரசியல் தந்தி

ரோபாயங்கள் கவைக்குதவாதவை என்பதை பிரிட்டிஷ் பொதுமக்கள் உணர்ந்து வருகின்றனர் என்பதே அவ் யோசனைகளின் உண்மை தாத்பரியம். அட்லி அண்டு கம்பெனியாரின் தவறுகளால் விளைந்த பேரபாயத்தை உணர்ந்து விட்டனர் என்றே கூறவேண்டும். ஐக்கிய பாதுகாப்பு முறையை வற்புறுத்தி "காஷ்மீர் முதலிய இந்தியா-பாக். பிரச்னைகளைத் தீர்க்க ஒருபுதிய முறை கையாளப்படவேண்டும்," என்று லிபரல் பத்திரிகை "நியூஸ்கிரானிகிள்" தனது தலையங்கத்தில் கூறியிருப்பது, பிரிட்டிஷ் பொது மக்கள் விழிப்படைந்து விட்டனர் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. "பெபரளவில் ஆஜாத் காஷ்மீர் தலைவராயிருக்கும் செளத்ரி குலாம் அப்பாஸும், கஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவும் கூடிப்பேசி விவகாரத்தை சுமுகமாய்த் தீர்க்கவழி காணவேண்டும். அவர்கள் இருவரும் செய்யும் தீர்மானத்தை ஐ நா, ம் ஒப்புக்கொள்ள வேண்டும், " என்று அதுயோசனைகூறி தொடர்ந்து எழுதுகையில் " செஞ்சீனபடைகள் லாஸா, நேப்பாளம் நோக்கி விரைந்து வருவதால் ஓர் புது அவசரநிலைமை ஏற்பட்டிருக்கிறது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது திபெத்தில் நிரந்தரமாய் யுத்தவெறி பிடித்த சக்தி ஒன்று இருப்பது இந்திய உபகண்டத்திற்கே பெரும் தொல்லையாக முடியக்கூடும். இவ்வித நிலைமையில் இரு நாடுகளும் தமது வட எல்லை பாதுகாப்பை ஒற்றுமையாய் ஐக்கியமுறையில் மேற்கொள்வது அவசியமாகும். இருநாடுகளும் ஐக்கிய பாதுகாப்பு முறையை மேற்கொண்டு தமது பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கவும் முற்பட்டால் அபாயத்தின் கடுமை சற்று குறையக்கூடும் என்று கூறுகிறது.

நியூஸ்கிரானிகிள் கூறும் ஆலோசனையையும் அக் 28-ல் ஸ்ரீநகரில் (நேஷனல் கான்பரன்ஸ்) தேசியமஹாநாட்டின் தொண்டர்கள் முன் நேருஜி நிகழ்த்திய பிரசங்கத்தையும் ஆராயவேண்டும். "அந்நிய நாட்டினர் பிரச்னையின் உண்மை நிலைமை என்னவென்பதை அறியாது அதை ஆராய்வதாலேயே காஷ்மீர் விவகாரம் சர்வதேசஅரசியல் பகடைக்காய் போலாகிவிட்டது," என்று நேருஜி கூறினர். மேற்கத்திய பத்திரிகைகள், அரசியல் வாதிகள், முதலாலிகள் நம்மிடம் கொண்டுள்ள அநுதாபம் நமக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்றகாரணத்தாலல்ல; அவர்களின் சுயநலத்திற்குமுடிவு சமீபித்து விட்டதென்பதே உண்மை காரணம் என்பது நிச்சயம். நேற்று அவர்கள் இன் நாட்டுக்கு சுதந்திரமளித்தது, சுதந்திரம் இந்நாட்டினரின் பிறப்புரிமை என்பதற்கல்ல. கம்யூனிஸத்தை எதிர்த்து போரிட ஒரு நல்லதளமாய் உபயோகிக்கமுடியும் என்ற காரணத்தாலேயே. துண்டாடப்படாவிட்டால் இந்நாடு விடுதலை பெருவது அசாத்தியம் என்று கூறி இந்நாட்டைப் பிரிவினை செய்தனர் ஆனல் இன்று அவர் பொருளாதார, அரசியல் சுயநலத்திற்கு அபாயம் ஏற்பட்டதும் ஐக்கிய பாதுகாப்பை மேற்கொள்ளுங்கள் என்று ஆலோசனை கூறுகின்றனர். காஷ்மீர் மக்களின் அபிலாஷைகள் என்ன? அவர்களுக்கு இன்று எவ்வித அபாயம் நோக்குகிறது? அவர்கள் விரும்புவது என்ன? தங்கள் தாயகத்தை எவ்வித நிலைமைக்கு கொணர அவர்கள் எண்ணுகின்றனர்? என்பதை யோசிக்க வேண்டிய அவசியம் எள்ளளவும் வெள்ளையர்க்கில்லை. காஷ்மீர் விவகாரம் தீராமலிருப்பதால் தங்கள் சுயநலத்திற்கு வகை ஏற்படுமா? அல்லது ஜன நாயகமுறையில் தீர்க்கப்படுவதால் தங்கள் நோக்கம் ஈடேறுமா? என்றே எண்ணுகின்றனர்.

நாம் காஷ்மீர் மக்களை வெள்ளையரின் இந் நவீன தந்திரத்தில் சிக்கி தேசிய மகாநாட்டின் லட்சிய தீர்மானத்தை கைவிடவேண்டாம் என்று எச்சரிக்கிறோம். அத் தீர்மானம் அகில உலக ஜன நாயக வாதிகளின் அபிமானத்தை கவர்ந்ததாகும் தேர்தல் மூலம் உருவாகும் அரசியல் நிர்ணய சபையே காஷ்மீரின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் என்று அத் தீர்மானம் கூறுகிறது. பொதுதேர்தல்கள், வயது வந்தோர்வாக்குரிமை அடிப்படையில் நடக்கும். செளத்ரி குலாம் அப்பாஸுடன் சமரசம் செய்துகொள்வதோ அல்லது அதற்கு முயற்சிப்பதோ காஷ்மீர்சிக்கலை கடுமையாக்கக்கூடியது மட்டுமல்ல; பொதுமக்களின் பரமவைரிகள், ஜனநாயகத்தை கழுத்தை நெறித்து கொலைசெய்யும் கொலைபாதகர்கள், தூரகிழக்கு நாடுகளில் தங்கள் சுயநலத்திற்கு தோல்வியேற்பட்டதும் சமீபகிழக்கு நாட்டு மக்களின் ரத்தத்தால் சுயநல விருட்சத்திற்கு உரமிட விரும்பும் ஏகாதிபத்தியங்களின் சமிக்ஞைகள்படி கூத்தாடும் கயவர்களுடன் உடன்பாடு செய்துகொள்வதற் கொப்பாகும் இச்சந்தர்பத்தில். ஆசியநாடுகளின் அரசியல் தலைவர்களையும் நாம் எச்சரிக்காமலிருக்க முடியவில்லை. "விழிப்படைந்து விடுங்கள்; ஏகாதிபத்தியங்கள் உங்கள் நாடுகளில் விரித்திருக்கும் வலையை துண்டு துண்டாய்ப் பிறித்தெறியுங்கள்; தெளிந்த அறிவு, வருங்காலத்தில் போதிய கவனத்துடன் சுதந்தர ஜனநாயகத்தை பலமடையச் செய்வோமாக எனெனில் அதனாலே ஆசிய நாடுகள், அரசியல் பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றமடைந்து, மானிட சமுதாயத்தின் நலன்களை பாதுகாக்க முடியும் என்பது நிச்சயம்.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும்,
விபரங்களுக்கும்
கீழ்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்,

29 MAY 1955

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 4 } 29—1—1951 திங்கட்கிழமை { இதழ் 1

காங்கிரசின் வருங்காலம்.

இன்று காங்கிரஸ் அழிவை நோக்கி விரைகிறது. இவ்வுண்மை நமது இதயங்களைப் பிளந்து இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்வதா யிருப்பினும், மறுக்க முடியாதது. இவ்வழிவுப்படலம் 1947-செப்டம்பரில் வகுப்பு வாதிகளுக்குமுன் காங்கிரஸ் மண்டியிட்டு நாட்டைத் துண்டாடும் திட்டத்தை ஏற்றுக் கொண்ட தினத்தன்றே ஆரம்பம் ஆகிவிட்டது. நியாயம் - அநியாயம்; தர்மம் - அதர்மம்; இருள்—வெளிச்சம், ஆகியவை ஒருபோதும் ஒன்றுய்க் கூட முடியாது. ஆனல் காங்கிரஸ் அதை காலப் போக்கின் அவசரத்தேவை என்றது. அதனல் பல தவறுகள் இன்று காங்கிரசில் புகுந்துகொண்டன, பெறு முயற்சிக்குப் பின்பும் அவற்றை நீக்க முடியவில்லை: முடியவும் முடியாது. ஏனெனில் வகுப்புவாத ரணங்கள் அதை சக்தியற்றதாக்கிவிட்டன - மேலும் அதன் எதிர்ப்பு சக்தியும் குன்றிப்போய்விட்டது. ஆகவே முதலாளிகள் கொள்ளை லாபக்காரர்கள், கறுப்பு மார்க்கட் காரர்களையும் தாஜா பண்ணவேண்டியதாயிற்று. அதனல் வரையறுக்கப்பட்ட காங்கிரஸ் கொள்கைகளைப் பின்பற்றுவோரின் ஸ்தாபனமாயிராமல், வகுப்புவாதம், சுயநலம், கருப்பு மார்க்கட் முதலாளித்துவம், சுற்றத்தாருச்கு சலுகை காட்டுதல் போன்ற கேடுகெட்ட கொள்கைகளுக்கும் பிரதிநிதித்வம் அளிக்கக் கூடியதாகி விட்டது, ஆகவே எந்த பிரச்னையை தீர்க்க வேண்டியிருப்பினும் மேற்கூறிய சாபக்கேடுகளுக்கு சாதகமாகவே முடிவு செய்ய வேண்டியதாக யிருக்கிறது. அதனல் நாட்டின் பெரும் அரசியல் ஸ்தாபனமும், மாகாண மத்திய அரசாங்கங்களின் பூரண அதிகாரம் பெற்றதும் காங்கிரசே ஆயினும், கொள்ளை லாபம், பதுக்கல், சுயநலம், லஞ்சம், வகுப்புவாதம் வகும்புவாதம் நாளொருமேனி, பொழுதொருவண்ணம் எனவளர்ந்து வருகின்றன. ஒருபுரம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பித்தஜுரம்போல் ஏறிக்கொண்டே போகின்றன, மறுபுரம் மதசார்பற்ற ராஜ்யத்தன்மையை பழித்துக்காட்டும் வகுப்புவாத ஸ்தாபனங்கள் கொம்மாளமடித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு அரசியல் ஸ்தாபனம் என்ற முறையில் காங்கிரஸ் மகாசபையின் உயர்வு. தாழ்வு முக்யத்துவம் வாய்ந்ததல்ல. ஏனெனில் அரசியல் ஸ்தாபனங்கள் தோன்றவும் மறையவும் கூடியவை. ஆனல் இன்று நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலைமையில் காங்கிரசுக்குள்ள பொருப்பு அரசியல் அந்தஸ்தைவிட அதி முக்கியமானது. காங்கிரசின் ஸ்தானத்தை வகிக்கத் தக்க வேறுஸ்தாபனம் ஒன்று இருக்குமானல் காங்கிரசின் அழிவு அரசியல் சரித்திரத்தின் ஒரு சாதாரண விஷயமாகவே கருதப்படும். ஆனல் உண்மை நிலை அதற்கு முற்றிலும் எதிராகவே இருக்கிறது இன்று நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு குறைவேயில்லை மழைகாலத்தில் தவளைகள் பெருகுவதுபோல் பெருக்கிக் கொண்டே போகின்றன. ஆனல் காங்கிரஸ் விட்டுச்செல்லும் ஆசனத்தில் அமரத்தக்க ஸ்தாபனம் ஒன்றுமேயில்லை மேலும் தேசமக்களின் பூரண அபிமானத்திற்கு பாத்திரமான தலைவர்களும் அக்கட்சிகளில்லை காங்கிரசைத் தவிர மற்ற ஸ்தாபனங்களின் செல்வாக்கும், அவற்றின் திட்டங்களும், குறிப்பிட்ட அளவுக்குட்பட்டவை மேலும் அகில தேசத்திலும் பரவியுள்ள இறக்கங் கொண்டவையுமல்ல சுறுங்கக் கூறுமிடத்து, குறிப்பிட்ட பிரதேச அரசியல் கட்சிகள் அநேகமிருப்பினும், அகில தேசிய ஸ்தாபனம் ஒன்றுமில்லை என்றே கூற வேண்டும். அத்தகைய ஸ்தாபனம் ஒன்று உண்டென்றல் அது காங்கிரசே அதைத்தவிற வேறில்லை ஆனல் அது அழிவை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது. ஆகவே அதன் அழிவு, நாட்டின் அழிவுக்கு காரணமாகிவிடுமோ? வென்று அஞ்சுகிறோம். தேசம் இப்பொழுதுதான் விடுதலை பெற்றது, அடியெடுத்து வைக்கவும் சக்தியற்ற சிறு குழந்தை. ஆகவே தேசத்தில் வேறு தகுந்த அரசியல் ஸ்தாபன இல்லாத போது காங்கிரஸ் அழிவுற்றல், நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுவிடும் அதனல் இந்திய நிலைமை எத்தகைய சீர்கேட்டை யடையும்? அவ்விதமாயின் தற்கால சர்வதேச நிலைமை நம்மை எத்தகைய நிலைமைக்கு கொண்டுசெல்லும் என்று சிந்திக்கும்போதே குடல் நடுக்கம் உண்டாகிறது. நான்கு ஆண்டு சுதந்தரவாழ்க்கை அனுபவித்த ஒரு நாடு வருங்கால உலக மஹாயுத்தத்தின் பயங்கர விளைவுகளை எவ்விதம் சமாளிக்கமுடியும்? அண்டை நாடுகளை ஆட்டி வைக்கும் மாறுதல்களை எவ்விதம் எதிர்ப்பது? என்ற முக்கிய விஷயங்களை தேசபக்தி சிறிதளவாவது கொண்டுள்ள அனைவரும் நன்கு யோசிக்கவேண்டும்.

சர்வதேச நிலைமை, உள் நாட்டுப் பிரச்னைகள் முதலியவற்றை கவனித்தால் காங்கிரசின் வாழ்வு நாட்டுக்கு எவ்வளவு அவசியம் என்பது புலனகும். ஆயினும், அந்த முக்கிய இயந்திரத்தின் பாகங்கள் ஒவ்வொன்றுய்ப் பிரிந்து சென்றுகொண்டிருக்க அவ்விதம் பிரிந்து செல்வதை மற்ற பாகங்கள் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டிருக்க, நாட்டின் முன்னேற்றத்தை எவ்விதம் பாதுகாப்பது? காங்கிரசின் வாழ்வில்

முப்பது ஆண்டுகளுக்கு முன் இதே நிலைமை ஏற்பட்டது. ஆனல் அன்று வேறு காரணங்களால் அவ்வித நிலைமை ஏற்பட்டது. அன்று மிதவாதக் கொள்கையை விட்டு, தீவிரக்கொள்கையை மேற்கொண்ட காங்கிரஸ் ஒத்துழையாமை போரில் இறங்கியது. அதனல் மிதவாதிகள் காங்கிரசை விட்டு வெளியேறியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அவ்வித வெளியேற்றம் காங்கிரசுக்கு நன்மையே உண்டாக்கியது. ஏனெனில் மிதவாதிகள் வெளியேறிவிட்டதால், விடுதலைப் போரில் உடல் பொருள் ஆவி அனைத்தையு தியாகம் செய்யும் உத்தமர்களின் ஸ்தாபனமாகிவிட்டது. அதனல், காங்கிரஸ் மஹாசபையின் முயற்சியாலேயே நாடு விடுதலையடையும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனல் இன்று காங்கிரசை விட்டு வெளியேறுபவர்களோ அன்று காங்கிரசுக்காக தமது சகலத்தையும் தியாகம் செய்தவர்கள். இன்னும் தியாகம் செய்யவே வெளியேறுகின்றனர் என்ருல் நமது துரதிருஷ்டத்தை கூறவும் வேண்டுமோ? அவ்வுத்தமர்களை, காங்கிரசை படுநாசத்திற்கு அழைத்துச் செல்லும் பிற்போக்கு சக்திகள் காங்கிரசைவிட்டு வெளியே துரத்துகின்றன. அன்று காங்கிரசைவிட்டுவெளியேறியவர்கள், இன்று காங்கிரசின் ஜீவநாடி போன்றவர்களை வெளியேறச் செய்கிருர்கள். இன்று காங்கிரசுக்குள்ளும், வெளியிலும், அவ்வுன்னதஸ்தாபனத்தின் சக்தியை ஒடுக்கும் காரியத்தில் காங்கிரஸ்காரர்களே ஈடுபட்டுள்ளனர். அவர்களின் கொட்டத்தை அடக்கக்கூடியவர்களோ, கையைக் கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இன்று, காங்கிரஸ்காரர்களே காங்கிரசுக்கு எதிரான ஸ்தாபனத்தை நிறுவாத மாகாணமே இந்தியாவில் இல்லை. ஸ்ரீ சச்சர், திருலோகிசிங், டி. பிரகாசம், ஜயபிரகாஷ் நாராயண், ராம்மனேஹர் லோஹியா, கிருபளானி, நரேந்திரதேவ் முதலியவர்களை யாராவது குறைகூற முடியுமா? வங்காள தலைவர், விடுதலை வீரர் டாக்டர் பிரபுல்ல சந்திர கோஷும் காங்கிரசை விட்டு வெளியேறி, கிருஷிக் பிரஜா தொழிலாளர் ஸ்தாபனத்தை அமைக்கப்போவதாய் அறிவித்துவிட்டார். அவர் பலகாலம் காரியக் கமிட்டி அங்கத்தினராயிருந்தவர். ஆகவே அவருடைய காங்கிரஸ் பக்தியை குறை கூற முடியாது இவ்வுத்தம தலைவர்களின் வெளியேற்றம் எத்தகைய பலனை உண்டாக்கும் என்பதை அறியவில்லை என்ருல் அது முற்றிலும் வேறு விஷயம். ஆனல் காங்கிரசுக்குள் இன்று ஏற்பட்டுள்ள சீர்கேடுகளை சீர் செய்யாவிட்டால் வரும் பொதுத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற முடியாதென்பதை நாம் மறந்துவிடலாகாது. அதன் பயனய் சக்தி வாய்ந்த மத்திய அரசாங்கம் ஏற்படாதென்று அஞ்சுகிறோம். மேலும் மத சார்பற்றக் கொள்கைக்கு வெடி வைக்கும் விதம் மாகாணங்களில் வகுப்புவாதம் தலையெடுக்கவும் கூடும். அவ்வித நிலைமை ஏற்பட்டால் தேச முன்னேற்றமே தடைப்பட்டு அன்னியரின் உதவியால் மற்றொரு புரட்சிக்கு வகைசெய்யும் அவசியம் மக்களுக்கு ஏற்பட்டுவிடும் என்பது நிச்சயம். ஆதலால் தேசாபிமானம் கொண்ட ஒவ்வொரு இந்தியனும் சூழ் நிலையை மாற்ற முயற்சிக்கவேண்டும். மகாத்மா காந்தி மறைந்த இம்மாதத்தில் அவருடைய சேவையை போற்றும் வழி இதுவேயாகும்.

இந்தியாவும் சீனவும்

சந்தேகங்களைப் போக்குவது மிக அவசியம்.

ஆசிய நாடுகளின் விடுதலை, சமாதானம், முன்னேற்றம் முதலியவை உலகசமாதானத்திற்கு அடிப்படையானவை என்பது உண்மையாயின், ஆசிய முன்னேற்றத்திற்கும் சமாதானத்திற்கும் அடிப்படை. இந்தியா-சீன நேசஉறவே என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆசியமக்களை நெடுங்காலமாய்ஆட்டி வைக்கும் அந்நிய சக்திகளின் தலையீட்டையும், ஆசியாவின்வறுமைக்கும் பிற்பட்டநிலைமைக்கும் காரணமான ஏகாதிபத்தியங்களின் தந்திரங்களையும் முறியடிக்கக் கூடியமாபெரும்சக்தி இந்தியா-சீனவின் ஒற்றுமையும் ஒத்துழைப்புமே இந்தியா-சீன இயற்கை வசதிகளை தக்கமுறையில் பயன் படுத்தி, இன்று அகில உலகிலும் முன்னேற்றமடைந்து நம் பெருமைக்கு உகந்த நாடுகளுக்கு சமமான அந்தஸ்த்தை ஆசியநாடுகளும் அடைய முடியும். அதிசயக் கதைகளைப்போல் அமெரிக்க விஷயங்களை நாம் ஆர்வமுடன் படிக்கிறோம் ஆனல் ஆசியா நாடுகளும் இந்திய சீன ஒத்துழைப்பால் முன்னேறக்கூடும் என்பதை நாம் மறந்துவிடுகிறோம் இந்தியா-சீன நேச உறவால் ஏற்படக்கூடிய உன்னத நிலைமை ரகசிய விஷயமல்ல நம்மை விட நம் பகைவர்கள் நன்கு அறிவர். ஆசியாவின் இவ்விரு பரந்த நாடுகளும் அடையக்கூடிய உன்னதநிலைமையை நினைப்பினும் நம் பகைவர்கள் பொருமைப்படுகின்றனர் இக்காரணத்தாலேயே இன்றைய இந்திய-சீனநேச உறவு அவர்கள் விரும்பவில்லை. ஆகவே எவ்வகையிலும் அவற்றிடையே தீராப்பகை ஏற்படுத்த இயன்ற அளவு முயன்று வருகின்றன. ஐ. நா, சபையில் சீனவுக்குறிய உரிமை கிடைக்கச் செய்ய இந்தியா முயன்றதும், அதை எவ்விதத்திலும் தடைசெய்ய ஏகாதிபத்தியங்கள் தந்திரோபாயங்கள் மேற்

கொண்டதும் யாவருமறிவர். அதேபோல் திபேத் மீது சீன படையெடுப்புச் செய்திகள் சீனமீது இந்தியாவுக்கு அவநம்பிக்கையும் சந்தேகமும் ஏற்பட்டு நேச உறவை விட்டுவிடத் தக்க முறையில், திருத்திக் கூறப்பட்டன

திபேத் விஷயம் இந்தியா—சீன இரு நாடுகளுக்கும் மிக சிக்கலான பிரச்னை என்பது உண்மையே அதனால் அவ்விரு நாடுகளுக்கிடையே சில சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் அவற்றை களைவது கடினமல்ல. மிக எளிதில் அவநம்பிக்கைகளுக்கு முடிவுகட்டப்படும் என்று நம்புகிறோம். இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட சீன கடிதத்தை "நியூ சீன செய்தி ஸ்தாபனம்" பிரசுரித்திருக்கிறது. அக்கடிதம் திபேத் பிரச்னையை தெளிவாக்குகிறது. ஆகவே பகைவர்களால் பெரும் பிரச்சாரம் செய்யப்பட்டு இந்திய அரசாங்கத்தின் அக்டோபர் 31-ந்தேதி கடிதத்தில் கூறப்பட்டுள்ள எல்லா சந்தேகங்களையும் தெளிவாக்குகிறது. அக்-30-ந்தேதி இந்திய கடிதத்தைவிட 31ந்தேதியகடிதம் எல்லா சந்தேகங்களையும் தெளிவாய்க் கூறத்தக்கதாகும். ஆகவே பிரசுரிக்கப்பட்டுள்ள அந்த கடிதம் இன்றுவரை ரகசியமாயிருந்த பல விஷயங்களையும் அம்பலமாக்கி விட்டது. உதாரணமாக:-

"சீன பொதுஜன விடுதலைப்படைகள், தீர்மானிக்கப்பட்டபடி கூடிய சீக்கிரம் மேற்கு சிகாங்கில் நடவடிக்கை எடுக்கப்போகிறது. ஆகவே திபேத்திய தூது கோஷ்டியினர் செப்டம்பர் முடிவுக்குள் சீன பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்திய சர்க்கார் செய்யுமென சீன சர்க்கார் நம்புவதாக வெளிநாட்டிலாகா 31-ஆக,1950 அன்று சீனவில் இந்திய ஸ்தானிகராயிருக்கும் சர்தார் பணிக்கர் மூலம் தெரிவித்து விட்டது."

"செப்டம்பர் ஆரம்பத்திலும் மத்தியிலும் சீன சர்க்கார் பிரதமகாரியதரிசியும், பிறகு ஸ்தானிகர், யான்சிங் ஹசீனும் தூதுகோஷ்டியினர் எவ்விதத்திலும் செப்டம்பர் முடிவுக்குள் பீகிங் வந்து சேர வேண்டியது மிக முக்கியம். இல்லையெனில் அதனால் ஏற்படுவதற்கு தூதுகோஷ்டியே பொருப்பு என்று தெரிவித்திருந்தனர் செப்டம்பர் மத்தியில் மறுபடி ஸ்தானிகர் யான் அவ்விஷயத்தை இந்திய சர்க்காரிடம் பிரஸ்தாபித்தார். ஆனால் அந்நிய நாடுகளின் சமிக்ஞைகளால் திபேத்திய தூது கோஷ்டி காலதாமதம் செய்துவந்தது."

சீன கடிதத்தின் மேற்கூறிய பகுதிகள் உண்மை நிலையை தெளிவு படுத்துகின்றன. அதை வெளிநாடுகள் அறியாதிருந்தன இக்கடிதத்தை நெடுங்காலம் வரை இந்திய சர்க்கார் வெளியிடாதிருந்தது ஆச்சரியமூட்டுகிறது. அதனால் சீன படையெடுப்பை திடீர் நடவடிக்கை என எண்ணவேண்டியதாயிற்று. தவிர அச்சீன கடிதத்தில்:-

பேச்சு வார்த்தைகளை நடத்தாது காலம் போக்கும் கொள்கையால் லாபமடையும் நோக்குடன் திபேத் அரசாங்கம் சிகாங் மாகாணத்தில் ஓர் பலம் மிக்க ஆயுதப்படை அனுப்பியது திபேத்துக்கு விமோசனம் அளிப்பதை தடைசெய்வதே அதன் முழு நோக்கமாகும்." என்று கூறப்பட்டிருக்கிறது.

திபேத்திய சர்க்காரின் அந்நடவடிக்கை மிகமோசமானது. ஆகவே திபேத் சர்க்கார் அதற்கு தகுந்த காரணம் கூறியே தீரவேண்டும். இந்தியாவும் இவ்விஷயத்தில் தன் நிலையை தெளிவாக்கிவிட வேண்டும். விஷயம் சிகாங்மாகாணம்வரையே சென்றுள்ளதாயின் திபேத்மீது சீனபடை எடுப்பு என்ற சம்பவம்வெறும் கதையே எனலாம். ஏனெனில் சிகாங் முதலிய புற மாகாணங்கள் உண்மையில் சீன பிரதேசம் உண்மை திபேத்திற்கும் சிகாங் மாகாணத்துக்கும் தொடர்பேயில்லை. ஆகவே சிகாங்கில் திபேத் சர்க்கார் தமது படைகளை அனுப்பினர் என்றால் சீனவை வலுச் சண்டைக்கு இழுத்தது திபேத்தே என்பது நிச்சயம்.

அக் கடிதத்தில் இந்திய சர்க்காருக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களைப் போக்கவும் முயலப்பட்டுள்ளது.

'திபேத்தில் தமக்கு எவ்வித அரசியல் பிரதேச குறிக்கோளும் இல்லை. அங்கு இந்தியா எவ்வித ஆதிபத்தியத்தையும் நாடவில்லை என்று இந்தியசர்க்கார் தெளிவுபடுத்தி இருப்பதைக்கண்டு ஜனநாயக சீனவின் ஜனநாயக மத்திய சர்க்கார் சந்தோஷப்படுகிறது. திபேத்தும் சீனவும் பரஸ்பரம் நேசமுடனும், சமத்துவமுடனும் இருக்கும்வரை இந்திய சீன நட்பு பல மடைந்தே வரும். திபேத் விஷயம் குறித்து எழுந்துள்ள பிரச்னைகள். சீன-இந்திய அரசியல் வர்த்தக கலாசாரம்பொருத்தவை. சாதாரண அரசியல் நோக்குடன் அணுகினால் அவற்றைச் சுலபமாய் தீர்த்து விடலாம். '' என்று அக்கடிதம் கூறுகிறது.

இந்தியா பொருத்தமட்டில், அது திபேத்மீது சீன ஆதிபத்தியத்தை ஏற்றுக்கொள்கிறது. திபேத் உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுயேச்சையுடனிருக்கும் என்றே சீனவும் கூறுகிறது. மேலும்திபேத் இந்திய வர்த்தகநலனையும் சீன ஏற்றுக்கொள்கிறது. ஆகவே இந்தியா-சீன இடையில் திபேத் குறித்து ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் இனி அவசியமில்லை. வருங்காலத்தில் திபேத்தில் சீன நடவடிக்கைஎவ்விதமிருக்கும் என்ற சந்தேகம் இனி இந்தியாவுக்கு இருக்காதென்று நம்பலாம். திபேத்தில் அந்நியர்கள் சிலர் தலையிடுவதாகவும், அதனால் சீன தூதுகோஷ்டியினர் தாமதத்திற்கு இந்தியாவும் காரணமென்ற சந்தேகம் பண்டித நேருவின் அறிக்கை இந்திய அயல்நாட்டிலாக்காவின் கடிதம் முதலியவற்றிற்கு பின் சீனவுக்கு இருக்காதென்றே கூறலாம்.

இந்தியக் குடியரசு முதலாண்டு நிறைவு நினைவு

(ஷேக்பீர், கல்லிடைக்குறிச்சி)

1. சுதந்திர தேவி வந்தாள்.
   சுகந்தா வில்லை. ஆனல்
   இதந்தரும் எந்தை காந்தி
   இன்னுயிர் தின்ருள். அந்தோ!
   நிதந்தரும் இன்ப மென்று
   நின்னையாம் எண்ணி வற்ருேம்.
   பதந்தரு பட்டேல் தன்னை
   பறித்தனை! பான்மை என்னே!

2. விடுதலை வந்த போது
   விண்மத வெறியை மூட்டி
   கொடுத்தது கொள்ளை, சாவு.
   குடியா சாள நின்ஞல்
   அடுத்தது என்ன வென்ருல்
   அதிமழை, புயல்,பூ கம்பம்
   படுத்திய நாசம், தண்ணீர்
   பஞ்சமும், பசியு மாமே!

3. இவ்விதம் முதலாண் டில்நீ
   இடாகொடுத் திட்டாய் மேலால்
   எவ்வித இன்னல் கட்கும்
   இந்தியர் உள்ளா காமல்
   செவ்விதாய் உடை,யூண், செல்வச்
   செழிப்புக ளளிக்க வேண்டும்.
   அவ்விதம் நல்கு முன்னை
   அன்புடன் பணிந்து காப்போம்!

4. காந்தியின் வழிகைக் கொள்வோம்.
   கல்வியும் வளரச் செய்வோம்.
   மீந்திடும் தெழில்கள் செய்வோம்.
   மிகுதிபயிர் விளையச் செய்வோம்
   எந்திடும் நேரு ஆட்சி
   இணையிலா தோங்கச் செய்வோம்.
   ஈந்திடும் நலமை பாரில்
   என்றுமிங் கிலங்கு வாய்நீ!

செய்திகள்.

—: பஞ்சம் நீங்க வழி. :—

தஞ்சை மளிகை வியாபாரியும், பழம்பெரும் தேச பக்தருமான ஜனப், S A. J அன்வர்சாயபு அவர்கள் தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லும் பஸ் மார்க்கத்தில் 5-வது மைலில் வெட்டாறு தென்புரம் அமைந்திருக்கும் குருவாடி கிராமத்தில், 80 குழி அதாவது 27-செண்டு நிலத்தில் C 25 (கோயம்புத்தூர் 25) என்ற நெல் சாகுபடி செய்திருக்கின்ருர் அந்தப் பயிரை பார்த்துக்கொண்டிருந்தாலே பஞ்சம் பறந்து போகும். ஒரு கதிரின் நீளம் 13-அங்குலமும்; 430 நெல்களுக்குக் குறையாமலும் இருக்கின்றது. இதை கணக்கிட்டால் ஏகருக்கு 150-கலம் (75-மூட்டைகள்) ஆகின்றது. எவ்வளவு குறைத்து கணக்கிட்டாலும் ஏகருக்கு 60-மூட்டை (120-கலம்) கட்டாயம் கிடைக்கும். நிலத்தை ஆழ உழுததைத் தவிர அதிகமான உரம் போட்டதாகத் தெரியவில்லை. இந்த 80-குழியும் 50-கலம் (25-மூட்டை) காணுமென்று சொல்லுகிருர்கள். 40-கலத்திற்கு ஒருபொழுதும் குறையாது. நாணும் மன்னர்குடி ஸ்ரீமான் T. S சுவாமிநாத உடையாரும் இதைப் பார்க்கப் போயிருந்தோம். பயிரைப் பார்த்ததும் பசி போய்விட்டது. இம்மாதம் ஜனவரி கடைசியில் அருவடையாகும். இதற்குமுன் விவசாயிகள் கட்டாயம் இதைப் பார்க்கவேண்டும் இந்தப் படி எல்லோரும் பயிரிட்டால் பஞ்சம் பறந்து போகும் அந்நிய நாடுகளுக்கும் நாம் கொடுத்து உதவ முடியும். விவசாயிகளே கவனியுங்கள். !!

கே. எம். ஷெரீப்,
கும்பகோணம்.

* * *

பட்டினி ஊர்வலம்.

4-1-51 வியாழக்கிழமை காலை 9-மணிக்கு மேலப்பாளையம் முனிஸிபல் ஆபீஸ் முன்னல் உள்ள மைதானத்திலிருந்து நெசவாளர் பட்டினி ஊர்வலம் மகா-ா-ா-ஸ்ரீ கனம் கலக்டர் அவர்கள் பங்களாவிற்கு புறப்பட்டது.

எல்லா நெசவாளிகளும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டு மகஜர் சமர்ப்பித்தார்கள்.

இங்ஙனம்,
ப. செ. அ. முஹம்மது யூசுபு,
தலைவர்
கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் சங்கம்
கீழ வீரராகவபுரம், மேலப்பாளையம்.

லிபியாவில் சன்னுேசி ஆட்சி.

(H A. ஸாதீக், திருச்சி)

மேற்குடி ரிப்போலி (தராப்லஸ்) ஸாரானிகா, பை ஜான், முதலியவற்றின் சட்டசபை 4 டிசம்பர் அன்று கூடி, சையித் இத்ரீஸ் சன்னுேசியை சுதந்திர லிபியா வின் மன்னராய்த் தேர்ந்தெடுத்தது. லிபிய சமஷ்டி ஆரசியல் நிர்ணயமும் மும்முரமாய் நடந்துவருகிறது. 1952-ஜனவரி முடிவுக்குள் திட்டம் அமுலாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே ஐ. நா. வின் மேற்பார்வையில் லிபியா ஒரு சுதந்திர தேசம் என்ற அந்தஸ்தை அடைந்துவிடும்.

அமீர் சன்னுேசியைப்பற்றி கூறவேண்டிய அவசிய மில்லை. கடந்த உலகமஹாயுத்தத்தில் நேசநாடுகளுக்கு உதவியவர். மேலும் ஸாரானிகாவின் ஸமஸ்தானுதி பதி காலத்திலும் வெள்ளேயரை போற்றிவந்தவர். ஆகவே லிபியா மக்களுக்கு சுதந்திர மளிப்பதாகபசப்பி பிரிட்டன், பிரான்ஸ் ஏகாதிபத்தியங்களின் சுயநலத் திற்கேற்ற மன்னரை சிம்மாசனமேற்றியது ஆச்சரி யப்படத்தக்கதல்ல. லிபியாவில் கடற்படை தளமும், விமானப் படைக்கூடங்களும் ஏற்படுத்தி, மத்திய கிழக்கு நாடுகளில் சுரண்டல் கொள்கைக்கு பங்கம் ஏற்படாது காப்பாற்றவே பிரிட்டன், லிபியாவில் தன் ஆதிபத்தியம் நீடிககச் செய்கிறது. பிரெஞ்சு ஆப் பிரிக்க ஏகாதிபத்தியத்தை சுரண்டும் நோக்கமே, லிபி யாவில், பிரான்ஸ் தலையிட்டுள்ளதற்கு காரணமாகும்.

ஜனநாயக முறையில் தங்கள் நாட்டு அரசியலை வகுக்க லிபிய மக்களை அநுமதித்திருக்க வேண்டும். அதே முறையில் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை நிர்ணயமாகியிருந்தால் மிக சிலாக்கியமானது. இன்று ஏதேச்சாதிகாரம் அகில உலகிலும், மரணத்தருவாயில் இருக்கிறது. இச்சந்தர்பபத்தில் லிபியாவில் ஏதேச் சாதிகாரத்திற்கு அஸ்திவாரமிட்டு பொதுஜன சேவை செய்வதென்பது அசாத்தியம் என்பது வெளிப்படை ஆகவே லிபியா சுதந்திரமடைந்ததைப் பற்றி யாவரும் சந்தோஷப்படுவர். ஆனுல் அவ்விடுதலை பொது ஜன விடுதலையல்ல, வெள்ளேயர் ஏகாதிபத்திய சுயநலத்திற்கு பாதுகாவலன் போன்ற ஒருவரின் பட்டமளிப்பே என்பது வருந்தத்தக்கது இதனுல் வெள்ளேயா மத்திய கிழக்கு நாடுகளை தமது ஆதிக்கத்தில் நிரந்தரமாக்க நினைக்கின்றனர் என்பது பிரத்யட்சம். லிபிய மக்கள் இவ்வுண்மையை அறிந்து, உண்மைச்சுதந்திரம் பெற போராடுவார்களாயின், உலக சுதந்தர பிரியர்களின் பூரண அனுதாபமும் அவர்களுக்கு கிட்டும் என்பது நிச்சயம்.

* * *

பாகிஸ்தானில் பிரஜா உரிமை பரிபோகிறது.

மிஸ்டர் குஸரி பேச்சு.

லாஹூர்-"பாகிஸ்தான் ஏற்பட்டதன் பயனுய் பேச்சு, எழுத்து சுதந்திரம் நம்நாட்டில் அறவே பரிக் கப்பட்டது," என்று முதலாம் பாகிஸ்தான் பிரஜாஉரி மை மஹாநாட்டில் பேசுகையில் வரவேற்புக்கமிட்டித் தலைவர் மிஸ்டர் முஹம்மத் அலி குஸூரி கூறினர்.

எல்லைப்புறமாகாண குற்ற பரம்பரைச் சட்டம், பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் அவசரச் சட்டம் போன்ற பல பாதுகாப்புச் சட்டங்கள், நிர்வாக அதி காரிகளுக்கு எல்லையில்லா அதிகாரம் கொடுத்துள்ளன. அதனுல் பொது ஜனங்கள் அதிகாரிகளின் பிடியில் சிக்கித் தவிக்கிறுர்கள். பாகிஸ்தான் ஏற்பட்டதும் சில தான்தோன்றிகள் பொது மக்களை தவறுன வழியில் செலுத்த முற்பட்டனர். இப்பொழுது பிரஜா உரிமை யைப்பற்றிப் பேசுவதும் தேசத் துரோகமாகிவிடும். தேசத் தொண்டே ஜீவலட்சியம் என்று நினைத்த பலர் இன்று பாதுகாப்பு சட்டத்தின்கீழ் விசாரணையின்றி சிறையில் வாடுகின்றனர். முஸ்லிம் லீக் தொண்டர்கள் பலரும் அவர்களில் இருக்கின்றனர் என்பது திகைப்பேற் படுத்தக்கூடியது."

தொடர்ந்து பேசுகையில் குஸூரி கூறினர்:—

"பாகிஸ்தானில் அரசியல் விழிப்பு ஏற்பட்டு விட் டது சில எதிர்கட்சிகள் தோன்றி வருகின்றன. இச்சமயம் பொது மக்கள் தங்கள் எதிர்ப்புச் சக்தியை கைவிடாது, தங்கள் அடிப்படை உரிமைகளையும் சுதந் தரத்தையும் பாதுகாக்க முற்பட்டால் இந்நிலைமையிலும் இந்நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றமுடியும்" என்றுர்

மஹா நாட்டில் பாகிஸ்தானின் பற்பல பாகங்களி லிருந்தும் 250 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

* * *

கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் சங்கம்

கீழ வீராகவபுரம், மேலப்பாளையம்.

18–1–51.

மேலப்பாளையம் நகரில், மேலேகண்ட பெயருள்ள சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு. 8–10–51-ம் தேதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. கீழ்க் கண்டவர்களை முறையே உத்தியோகஸ்தர்களாகவும், மற்றும் 41 பேர் களைக்கொண்ட நிர்வாகஸ்தர்களையும், (நிர்வாகக் கமிட்டி யும்) தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்டிருக்கிறது.

உத்தியோகஸ்தர்கள்

தலைவர்:- ஜனப் ப செ அ. முகம்மதுயூசுபு
உபதலைவர்:- ஆ. வா. அப்துல் காதர்
,, தண்டன். அப்துல் ரஜாக்
காரியதரிசி:. M. N. M. நெய்னு முகம்மது
உப காரியதரிசி:- V. A. M. காஜா
பொக்கிஷதார்:- M. M. செய்யது Md.
புஸ்தக அதிபர்:- திரு. A D. அரசு
ஆடிட்டர்:- ஜனப் பள்ளி யூசுபு
,, ,, புலவர் செய்யது மைதீன்

ஐக்கிய இந்திய சிற்பி சர்தார்பட்டேலின் சேவை.

சுதந்திரம் கிடைக்குமுன் இந்நாட்டில் 566-சமஸ்தானங்கள் சிதறிக்கிடந்தன. தேசபடத்தில் மஞ்சள் நிறமான எண்ணிறந்த பிரதேசங்கள் ஒன்றோடொன்று சம்மந்தமின்றிக் கிடந்தன. இன்று அவையனைத்தும் **ஆறு** யூனியன்களாகி விட்டன சர்தார் வல்லபாய் பட்டேலின் திறமையால் சமஸ்தானாதிபதிகளின் எதேச்சாதிகாரத்திற்கு சாவுமணியடிக்கப்பட்டு இந்தியநாடு பூரண ஐக்கியம் பெற்று விட்டது. உள்நாட்டில் இருந்து வந்த பெரும் பலஹீனம் சமாப்தியடைந்துவிட்டது. பித்தர்கள் சில நாள் ஹைதராபாத்தில் குழப்பம் ஏற்பட்டபோது, அத்துக்கிரிகளின் கொட்டத்தை ஐந்தே நாட்களில் அடக்கிய பெருமை சர்தார் பட்டேலுக்கே உறித்தானது. இன்று ஹைதராபாத் மக்கள்தான் அந் நாட்டின் மன்னராவர். ஸமஸ்தான ஜாகிர்தாரி முறைக்கு சாவுமணி அடிக்க பூரண ஏற்பாடுகளும் செய்து விட்டார். சர்தார் பட்டேல் வாழ்க பட்டேல் நாமம். ஆசிரியர்:

சுதந்திரம் கிடைத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 566 - சமஸ்தானங்களின் கொட்டத்தை யடக்கி அவற்றை தாய்நாட்டுடன் இணைக்கும் காரியம் முடித்துவைத்த பெருமை சர்தார்பட்டேலுக்கே சாரும்.

1948-49 ஆண்டுகளில் இந்திய அரசாங்கத்துக்கு பெரும் ஆபத்தாய் முளைத்த சிக்கலான பிரச்னைகளின் கீழ்க்கண்டவை முக்கியமானவை.

1. ஹைதராபாத் குழப்பம். வகுப்பு வாதிகளின் கொட்டத்தையடக்கி அந்நாட்டு மக்களுக்கு அபயமளிப்பது.
2. மோவார்பஞ்சு, பரோடா சமஸ்தானங்களை இணைப்பதும் போபால் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதும்
3. பாட்டியாலா கிழக்கு பஞ்சாப் சமஸ்தானங்கள்; ராஜஸ்தானம்; திருவாங்கூர்-கொச்சி; முதலிய மூன்றுசமஸ்தான யூனியன்களை தீர்மானிப்பது

சக்திவாய்ந்த ஐக்கிய இந்தியாவை நிர்மாணிக்க, சிதறிக்கிடந்த எண்ணிறந்த சமஸ்தானங்களை, சில யூனியன்களால் அமைப்பது மிக அவசர காரியமாகி விட்டது. சமஸ்தான நிர்வாகத்தை சீர்படுத்தி, பொருளாதார சீர்கேட்டை ஒழித்து நம்பிக்கையூட்டும் சீர்திருத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஜாகீர்தாரி முறைக்கு சமாப்தி கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்விதம், சமஸ்தானங்களில் ஜனநாயக முறையில் நிர்வாகம் நடைபெறவும், பொருளாதாரத் துறையில் இருந்த சிக்கலை நீக்கி சௌஜன்யநிலைமீளவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன்

இந்திய அரசியல் திட்டம் பூரணமானதும் அதே முறையில் சமஸ்தானங்களையும் முன்னேற்றும் காரியம் மேற்கொள்ளப்பட்டது.

மூன்று பெரிய யூனியன்கள் நிர்மாணம்

இந்தியா விடுதலையடைந்த முதல் ஆண்டில் ஆரம்பமான சமஸ்தான் இணைப்பு இரண்டாம் ஆண்டில் பூரண வெற்றியுடன் முடிவுற்றது; சமஸ்தானம் பொதுவாக மூன்று விதமாய் இணைக்கப்பட்டன.

(1) அண்டை மகாணங்களுடன் இணைப்பு (2) மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கொணரப்பட்டவை (3) மற்ற சமஸ்தானங்களுடன் சேர்ந்த ஒரு சுயதேவைப் பூர்த்தி பிரதேசமாக்குதல்.

1948-49-ல் ஆறு சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் இணைக்கப்பட்டன. அவற்றின் மொத்த விஸ்தீரணம் 23598 சதுரமைல்களாகும். ஜனத்தொகை 55 லெட்சம்.

வாந்தா, சுரோஹி, கோலாபூர், பரோடா முதலிய சமஸ்தானங்கள் பம்பாயுடனும், மேவாட்பஞ்சு, ஒரிஸாவுடனும், டெஹ்ரிகர்வால் உத்திரப் பிரதேசத்துடனும் இணைக்கப்பட்டன விலாஸ்பூர், போபால், ராம்பூர் முதலிய 8268 சதுரமைல் பரப்புகொண்ட சமஸ்தானங்கள் மத்தியசர்க்கார் நிர்வாகத்தின் கீழ் வந்தன. அவை சீப் கமிஷனர் மாகாணங்களாக்கப்பட்டன 147673-மக்களையும் 2-கோடி 40 லெட்சம் சதுரமைல் பரப்புக்கொண்ட 28 சமஸ்தானங்கள்ஒன்றாய் இணைக்கப்பட்டு(1) பாட்டியாலா—கிழக்கு பஞ்சாப் சமஸ்தானங்கள் (2) மஹாராஜஸ்தான் (3) திருவாங்கூர் கொச்சி, சமஸ்தான யூனியன்களாக்கப்பட்டன.

சமஸ்தான இணைப்பு:

சமஸ்தானங்களை பரஸ்பரம் ஒன்றாய் இணைக்கும் காரியத்தில் முன்னேற்றம் அடைந்தவிபரம் கீழ்கண்டவாறு நடைபெற்றது

106085- ச. மை. பரப்பும், 1 கோடி 75 லெட்சம் மக்களையும் கொண்ட 214 சமஸ்தானங்கள் மாஹாணங்களுடன் இணைக்கப்பட்டன

27329 ச. மை. பரப்பும் 28 லெட்சம் ஜனத்தொகையுமுள்ள 25 சமஸ்தானங்கள் மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

236360 ச. மை. விஸ்தீரணமும், 3 கோடி 76-லட்சம் மக்களையும் கொண்ட 304 சமஸ்தானங்கள் மூன்று சமஸ்தான யூனியன்களாக்கப் பட்டன.

இந்திய அரசியல்படம் பூர்த்தியாயிற்று

இந்திய அரசியல்படம் இன்று பூர்த்தியாய் வரையப்பட்டுவிட்டது. விடுதலைக்குமுன் 566 சமஸ்தானங்கள் தனித்தனியே சிதறிக்கிடந்தன ஆனால் இன்று அவை 6 பலம்பொருந்திய யூனியன்களாகிவிட்டன. அவை பாட்டியாலா, கிழக்கு பஞ்சாப் சமஸ்தான யூனியன், ராஜஸ்தானம், விந்திய பிரதேச மத்திய பாரதம், சௌராஷ்டிரம், திருவிதாங்கூர் கொச்சி யூனியன் முதலியவையே

ஹிமாசல பிரதேசம், கச்சு, பிலாஸ்பூர், போபால் ராம்பூர் முதலியஐந்தும் மத்திய அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்டவை. ஆகவே அவை டில்லியைப் போல் சீப் கமிஷனர் மாஹாணங்களாக்கப்பட்டன காஷ்மீர் ஹைதராபாத், மைசூர், பனாரஸ் மணிபூர், திரிபுரா, கூச்பிஹார், காஸ்ஸி முதலிய எட்டு சமஸ்தானங்கள், மாஹாணங்களுடனும். இணைக்கப்படவில்லை, மத்திய நிர்வாகத்தின்கீழும் கொண்டுவரப்படவில்லை, இவற்றில் ஹைதராபாத், மைசூர், காஷ்மீர், சமஸ்தானங்களைத்தவிர மற்றவை சமீப மகாணங்களுடன் இணைக்கப்பட்டன. மேற்கூறிய மூன்று சமஸ்தானங்களில் அரசியல் நிர்ணயம் செய்யப்பட்டு மத்தியசர்க்காரின் கீழ் பூரண சுயேச்சை நாடுகளாயிருந்து வருகின்றன. ஆனால் போக்குவரத்து, வர்த்தகம் அயல்நாட்டு விவகாரம், தபால்தந்தி முதலிய விஷயங்களில் அவை இந்திய சர்க்காரின் அதிகாரத்திலேயே இருந்துவருகின்றன,

சர்வ சமஸ்தானங்களிலும் ஒரே அரசியல் திட்டம்.

சமஸ்தான இணைப்புடன், அவற்றில் ஜனநாயக முறையில் நிர்வாகத்தை மாற்றியமைக்கும் காரியமும் மேற்கொள்ளப்பட்டது மாகாணங்களுடன் இணைந்த சமஸ்தானங்கள், அவற்றின் முக்கிய அங்கமாகி ஜன அரசியல் முறையின்கீழ் வரலாயின. மத்திய சர்க்காரின் கீழ் கொணரப்பட்ட சமஸ்தானங்களின் நிர்வாகம் பொருத்து, பார்லிமெண்டுக்கும் மத்திய சர்க்காருக்கும் அளிக்கப்பட்டது. மைசூர், ஹைதராபாத், போன்ற சுயேச்சை சமஸ்தானங்கள்; தங்கள் அரசியலை தாங்களே நிர்ணயித்து மத்திய சர்க்காரிடம் சில முக்கிய இலாக்காக்களின் பொருப்பை அளித்து பூரண சுயேச்சையுடன் இயங்கிவரும்

பொருளாதார ஐக்கியம்.

சமஸ்தான சமஷ்டி பொருளாதார ஐக்கியத்தை நிர்மாணிக்க 1949 அக்டோபரில் வி. டி கிருஷ்ணமாச்சாரியார் தலைமையின்கீழ் மூன்று அங்கத்தினரைக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக்கமிட்டியினர், எல்லா சமஸ்தானங்களுக்கும் ஒரேவித பொருளாதார திட்டம் தயாரித்தனர். அதன்படி, மாகாணங்களுடன் மத்திய சர்க்காருக்கு இருந்துவரும் பொருளாதார உறவே சமஸ்தான யூனியன்களுடனும் மேற்கொள்ளப்படும்.

உன்னத நிர்வாகம்:-

நிர்வாகத்துறையில் ஒரு நல்ல முற்போக்கு முறை மேற் கொள்ளபட்டது. மைசூரைப் போன்ற சமஸ்தானங்கள் இந்திய நிர்வாக சர்விஸ்ஸில் கலந்து கொள்ள தீர்மானித்தன. சிறிய சமஸ்தானங்களின் நிர்வாகத்தை திறம்பட நடத்த மத்தியசர்க்கார் நல்ல அதிகாரிகளை அனுப்பி உதவும், சமஸ்தான யூனியன் நிர்வாகம் திறம்பட நடைபெற பல ஆலோசகர்கள் மாகாணமத்திய சர்க்கார்களால் அனுப்பப்பட்டுளர். ஆங்காங்கு பப்ளிச் சர்விஸ் கமிஷன்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தாருக்கு அதிக சலுகைகள் கிடைக்கா வண்ணம் தக்க பந்தோபஸ்துகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஹைகோர்டுகள் பல ஆரம்பிக்கபட்டுள்ளன. பல சமஸ்தானங்களில் நியாய விசாரணை நிர்வாகம் தனித்தனியே பிரிவினை செய்யப்பட்டன, நீதிநிர்வாகம் தகுந்த முறையில் மேற்கொள்ள தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பல சமாஸ்தானயூனியன்களில் சிறந்த அரசியல் தலைவர்கள் இல்லாத குறையைப்போக்க, ஆலோசகர்கள் அனுப்பி ராஜபிரமுகர்களுக்கு ஆலோசனை கூறவும் இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

ஜாகீர் ஒழிப்பு;

சமஸ்தானாதிபதிகளின் சொந்த செலவுக்கு சொற்பத் தொகையை அளிக்கும் திட்டம் மிக நல்ல பலன் அளிக்கக்கூடியதாகும். ஏனெனில் சமஸ்தானங்களின் வருமானம் பொது மக்களுக்கு நலனளிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கேயன்றி, சமஸ்தானாதிபதிகளின் சொந்தசெலவுகளுக்கில்லை என்ற உண்மை நிலைஸ்திரமாகிவிட்டதால் ஆண்டுதோறும் 3-கோடிரூபாய் மீதமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது மஹாராஜாக்களுக்கு சொந்த செலவு கீழ்கண்ட விகிதப்படி நிர்ணயிக்கப்படும். சமஸ்தானத்தின் சராசரி வருமானத்தில் முதல் லட்சத்தில் 15-சதம், அடுத்த 4-லட்சத்தில் 10 சதம், மேலும் 5-லட்சத்தில் 7½-சதமும் அளிக்கப்படும் ஆனால் எவ்விதத்திலும் 10-லட்சத்திற்கு மேல் சொந்த செலவு மான்யம் அளிக்கப்படமாட்டாது, சமஸ்தானாதிபதிகளின் சொந்த சொத்துக்களை பிரதேச மந்திரி சபையின் அபிப்பிராயம் அறிந்தபின் சமஸ்தான சொத்துக்களினின்றும் பிரிக்கப்படும்.

சமஸ்தானங்களின் முன்னேற்றத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாயிருந்த ஜாகிர்தாரிமுறை ஜமீந்தாரி முறை முதலியவற்றுக்கு முடிவு கட்டப்படும்.

சமஸ்தான ராணுவ இணைப்பு

இணைக்கப்பட்ட சமஸ்தானங்களின் படைகள் யாவும் இந்திய ராணுவத்துடன் இணைக்கப்பட்டன. ஆனால் ஆரம்ப காலத்தில் சமஸ்தான ராணுவம் ராஜ பிரமுகர் அதிகாரத்தின் கீழ், திருவாங்கூர்-கொச்சி யூனியனில் மந்திரி சபையிடமும் இருந்தன.

ஹைதராபாத்.

சமஸ்தானங்களை இணைக்க சர்தார் வல்லபாய் படேல் கையாண்ட சமாதானமுறை ஹைதராபாத் விஷயத்தில் பலனளிக்கவில்லை. ஆகவே 13-முதல் 17-செப்டம்பர் 1948-வரை போலிஸ் நடவடிக்கை அவசியமாகியது. சமஸ்தானத்தில் குழப்பம் மேலும் மேலும் வளர்ந்து வந்தது நிஜாமும், அவருடைய சர்க்காரும் பிடித்த பிடிவாதத்தால் நிலைமை இன்னும் கடுமையாகிவிட்டது.

அவருடைய ஆலோசகர்களின் பசப்பலுக்கிரையாகி நிஜாம் ஹைதராபாதை சுதந்தர நாடாக்கும்

கனவு காணவாரம்பித்தார். அச்சமயம் இந்திஹாதுல் முஸலிமீன் என்ற ஸதாபனம் காஸிம் ரஸவியின் வகுப்புவாத தலைமையின்கீழ் பொது மக்களுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பெரும் தீங்கிழைத்து வந்தது. அதில் ஒன்றரை லட்சம் தொண்டர்கள் (ரஸாகார்கள்) இருந்துவந்தனர். அவர்கள் தினசரி தங்கள் பலத்தை வெளியிடும்நோக்குடன் ஆர்ப்பரித்து வந்தனர். பழிக்குப்பழி தீர்க்கப் போவதாய் கூக்குர விட்டனர். போக்குவரத்து, தபால் முதலிய இலாக்காக்களின் சொத்தை நாசம் செய்தனர். பொதுஜன இயக்கம் என்ற போர்வையில் மக்களுக்கு பீதி உண்டாக்கினர். எல்லையைத் தாண்டிவந்து இந்திய பிரதேசங்களைத் தாக்கி கொள்ளையிடலாயினர். அன்னிய நாட்டினின்றும் தளவாடங்களை வரவழைத்தனர். இந்திய முஸ்லிம்களின் சமாதான வாழ்வைக் கெடுத்தனர். ரகசிய ஒற்றர்கள் பலரை அனுப்பி இந்தியாவில் குழப்பங்களை உண்டாக்க நினைத்தனர். பாகிஸ்தானிகளை இந்தியாவின் மீது வெறுப்படையச் செய்தனர்.

ஹைதராபாதில் இவ்வித குழப்பம் நிகழ்வதைக் கண்டும் கைகட்டியிருக்க இந்திய சர்க்கார் விரும்பவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி ஒழிந்ததும் நிஜாம் சுதந்தர ஹைதராபாத் அரசாங்கம் அமைக்கப் போவதாய் ஜம்பம் பேசுவதையும் இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏகாதிபத்தியம் ஒழிந்தபின் சமஸ்தானங்களுக்குக் கிடைத்த சுதந்தரம் உண்மையின் சமஸ்தான மக்களுக்குக் கிடைத்ததென்பதே இந்திய சர்க்கார் கொள்கையாகும்

போலீஸ் நடவடிக்கை முடிவுற்று இருதினங்களுக்குப்பின் "ஹைதராபாத் வருங்காலத்தை ஹைதராபாத் மக்களே நிர்ணயிப்பர்," என்று இந்திய சமஸ்தான மந்திரி சர்தார் வல்லபாய் பட்டேல் கூறினார். செப். 23-ந்தேதி சமஸ்தான நிர்வாகப் பொருப்பை ராணுவ கவர்னர் மேஜர் ஜனரல் சௌதிரியிடம் அளித்து, "ஹைதாராபாத் பொதுமக்கள் கவர்னருடன் பூரணமாய் ஒத்துழைக்கவேண்டும்," என்று நிஜாம் கோரிக்கை விடுவித்தார். 'ரஸாகர்கள் லாயிக் அலிமந்திரிசபையை தம் மீது பல வந்தமாய் சுமத்தினர்,' என்று ரேடியோ பிரசங்கத்தில் நிஜாம் குறிப்பிட்டார்.

சமஸதானம் மீண்டது

ரஸாகார்கள் ஹைதராபாத் நிர்வாகத்தையே குட்டிச்சுவராக்கி போலீஸ் நடவடிக்கைக்கு முன் சமஸ்தானமெங்கும் குழப்பம் விளைவித்திருந்தன, இந்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்து ஒரு மாதத்திற்குள் அதாவது அக்டோபர் 1948-வரை சமஸ்தானத்தில் சமாதானம் நிலவச்செய்து விட்டனர். இக்காரியத்தில் கம்யூனிஸ்டுகள் முதலிய குழப்பவாதிகள் இட்டமுட்டுக் கட்டைகள் பலவற்றை தகர்க்க வேண்டிய அவசியம் ராணுவ கவர்னருக்கு ஏற்பட்டது. மேலும் போலிஸ் முதலிய இலாக்காகளின் உயர்ந்த அதிகாரிகள் ஓடிவிட்டதாலும் பல சிரமங்கள் தோன்றின.

1948-டிசம்பருக்குள் எல்லா தொல்லைகளையும் முறியடித்து சமாதானம் நிலவச் செய்வதில் வெற்றியடைந்தார் ராணுவ கவர்னர். வகுப்பு உறவு சௌஜன்ய நிலைமைக்கி மீண்டது, எவ்வித குழப்பமுமின்றி மக்கள் தங்கள் காரியங்களில் ஈடுபடலாயினர் வெளியேறியோர் திரும்ப குடி புகுந்தனர். கம்யூனிஸ்டுகளின் கொட்டம் அடக்கப்பட்டது. நிர்வாக யந்திரம் பழுது பார்க்கப்பட்ட நிதி நிலைமை சீர் செய்யப்பட்டது.

நிஜாம் சொந்த சொத்துக்கள்

இடைக்கால சர்க்கார் செய்த சிலசீர்திருத்தங்கள் குறிப்பிடத்தக்கவை. 1949 ஆரம்பத்தில், பதினாயிரம் சதுர மைல் பரப்பும், மூன்று கோடி ரூபாய் வருமானமுள்ள நிஜாமின் சொந்த நிலங்கள் சர்க்கார் வசம் ஒப்படைக்கப்பட்டது அவை நிஜாமின் சொத்தாகும். ஆகவே சுவர் அதிகாரத்தின் கீழிருந்தன. அக்காரியம் புரட்சிகரமானது அதுவே சமஸ்தான ஜாகீர்தாரி முறைக்கு சமாப்தி கட்ட அஸ்திவாரம் ஆகிவிட்டது மற்றொரு சீர்திருத்தத்தால் ஹைதராபாத் ஜாகீர்தாரி முறைக்கு சாவுமணியடிக்க சர்க்கார் தீர்மானித்தது. அந்த ஜாகீர்கள் சமஸ்தான நிலங்களில் மூன்றில் ஒரு பாகமாகும்.

ஹைதராபாதின் வருங்காலம் -

இந்திய சர்க்கார் அறிவித்தது போல் ஹைதராபாதின் வருங்காலத்தை நிரணயிக்க கூடியவர்கள் சமஸ்தான பொதுமக்களே என்ற கொள்கை செயலளவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இடைக்கால சர்க்கார் வாக்காளர் ஜாப்தாக்களை தயாரித்து விட்டது. ஹைதராபாத் அரசியல் நிர்ணய சபை என்றே சமஸ்தானத்தின் வருங்காலத்தையும் இந்தியாவுடன் தொடர்பையும் தீர்மானிக்க கூடியதாகும்.

சர்தார் பட்டேலின் சரித்திர புகழ்பெற்ற சமஸ்தான இணைப்பு பூரண வெற்றியுடன் முடிவுற்றது. அன்னார் தமதுநோக்கம் நிறைவேறிவிட்டதைக் கண்டு பூரணதிருப்தியுடன் இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டார். ஆனால் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வகை செய்வதும், ஐக்கியத்தைக் காப்பதும் போன்ற கடமை நமக்களித்துச் சென்றார். நமது கடமையை நிறைவேற்றி அவர் ஆத்மாவுக்கு சாந்தியளிப்போமாக.

காரைக்கால் பொதுக்கூட்டம்.

26—1—51 வெள்ளிக்கிழமை இந்தியக் குடியரசு முதலாண்டு விழா "நேத்தாஜி இளைஞர் கழகம்" சார்பாக மாலை மணி 6-30 க்கு காரைக்கால் அம்மையார் ஆலயத்திடலில், கும்பகோணம் மௌலானா அப்துல் ஹக்கீம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. R ராம் சீனிவாஸன், G. பாஸ்க்கரன், M. நாகராஜ முதலியார், O. அபுஹனிபா மரைக்காயர் சொற்பொழிவு ஆற்றினர் S. M. ஷேக் மதார்ஸா மரைக்காயர் திருமல்ராஜன்பட்டணம், மற்று பல முஸ்லீம் பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தனர் பாஸ்க்கரன் பேசுகையில் போலீஸ் கமிஷனர் குறுக்கிட்டதால் கூட்டத்தில் பரபரப்பேற்பட்டது. M. நாகராஜமுதிலியார் கமிஷனரிடன் வாதிக்கும் பொழுது இங்கிருந்துபோ என்று சொல்லுகையில் உடனே முதலியார் இதுஎன் தேசம் என்றார், பேச்சுரிமை. சுதந்தரம், காங்கிரசின் சேவை மஹாத்மாவின் தொண்டைப்பொருத்து பாலியன் ஆசிரியர் ஓர் அறிய பிரசங்கம் நிகழ்த்தினார். தலைவர் பிரசங்கத்திற்கு பிறகுவந்தன உபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

வி. எஸ். & சன்ஸ் பெப்பர்மெண்டுகள்

பொதுமக்களால் ஆதரிக்கப்படுவதற்கு

அதன் குணம்!

மணம்!!

மதுரம்!!!

இவைகளே அத்தாக்ஷி.

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்.

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்,

குழந்தைகளுக்கு
கைகண்ட மருந்துகள்

1. கஸ்தூரி மாத்திரை
2. கோரோஜனை மாத்திரை
3. ஹெல்த் மாத்திரை
4. பால் உப்பு
5. வேப்பெண்ணை தைலம்
6. குரு தைலம்
7. குரு பாலர் டானிக்
8. கக்குவான் மருந்து

குரு தைலம்
மகா சஞ்சீவி.

குரு மருந்துசாலை, : திருச்சினுப்பள்ளி.

குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

சுதந்திர சூரியன்

பிரகாசிக்கும்

இன்றைய நன்னாளில்

எமது மங்களகரமான

நல் வாழ்த்து

உரித்தாகுக!

* TRADE MARK *

தங்கவிலாஸ் புகையிலை தயாரிப்பாளர்கள்:—

M. A. ரெஜாக் & கோ

கும்பகோணம்.

Registered No 5068

தந்தி விலாசம்:— "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ. 57

டி.எஸ்.ஆர்.அண்.கோ.

கும்பகோணம்.

பிராஞ்சு:— மதராஸ் & மன்னார்குடி.

சந்தனாதித்தைலம், அரைக்கீரை விதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள், பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து,
வாசனைப்பாக்கு, வாசனை சுண்ணாம்பு, அரகஜா
முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

பீடி சக்கரவர்த்தி

RAMSAIT BEEDI

ராம்சேட் பீடி



த.பி.சொக்கலால் ராம்சேட் பீடி முக்கூடல்

Printed by V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarangapani East Vadamboki St, Kmu.
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.